IntSym 2019
9th International Symposium

# NECESSITY FOR THE ESTABLISHMENT OF NEW PRADESHIYA SABAH: A STUDY BASED ON SAINTHAMARUTHU

**M.M.F. Dilsiya**[133]

Correspondence: dilsiya094@gmail.com

ABSTRACT

Local government is the third layer of the government which is established to fulfil the basic needs of ordinary people. It is a viable institution to provide public services at the grass-root level. New local government system was introduced in Sri Lanka during the British colonial rule although the country has a long history in terms of local governance. At present, three types of local government bodies; Municipal Council, Urban Council and Pradeshiya Sabah are functioning in the country. The people of Sainthamaruthu has been requesting for an independent local government for 30 years. The main behind this issue is the independently governed "Karaivahu south council" since 1987 had been under the Kalmunai patina Sabah. Sainthamaruthu has the ability in receiving an independent local government. Against this backdrop, this research attempts to analysis important of the establishment of a new local government body in the Sainthamaruthu area. This study is a qualitative study with the limited application of quantitative techniques. The data were mainly collected through two different sources such as primary and secondary sources. Primary sources consist of questionnaire and in-depth interviews. The primary data resources based on the questionnaires according to the ratio of 1000:1 of Kalmunai municipal council population. For this 121 questionnaires and interviews were conducted. Secondary sources include books, documents, research articles, magazine, newspaper essays and internet materials. The objectives of the research are the observation of necessities required new local government and find the merits and demerits of establishing new local body of Sainthamaruthu.

Keywords: local government, Kalmunai Municipal Council, service delivery, sainthamaruthu area

**ஆய்வுச் சுருக்கம்**

உள்ளூர் ரீதியாக பிரதேச மக்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உருவாக்கப்பட்ட மூன்றாம் மட்ட அரசாங்கமாகவே இவ்உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படுகின்றன. இவ்வுள்ளூராட்சி மன்றங்கள் மூலமே சேவை வழங்கலை இலகுவான முறையில் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இலங்கை ஒற்றையாட்சி முறை கொண்ட நாடாக காணப்பட்டாலும் நாட்டிலுள்ள மக்களின் தேவைகள் பூர்த்தி செய்வதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கையின் உள்ளூராட்சி மன்ற முறை எனும் போது தற்போது மாநகர சபை, பிரதேச சபை மற்றும் நகர சபை என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்பட்டாலும் சேவை வழங்கலை பெற்றுக் கொள்ளும் உள்ளூர் பிரதேச மக்கள் பின்தங்கிய நிலையிலே உள்ளனர். உள்ளூராட்சி மன்றங்களின் சேவை வழங்கலைப் பெற்றுக் கொள்வதில் மக்களின் எதிர்பார்ப்பு அதிகரித்த வண்ணமே உள்ளது. அந்தவகையில், அம்பாறை மாவட்டத்தில் உள்ளடங்கும் இருபது உள்ளூராட்சி மன்றங்களில் ஒன்றான கல்முனை மாநகரசபையில் கீழுள்ள சாய்ந்தமருது பிரதேச மக்கள் தமக்கென தனியான உள்ளூராட்சி சபையினைப் பெற்றுத்தருமாறு சுமார் 30 வருடங்களாக கோரி வருகின்றனர். 1987ஆம் ஆண்டு வரை தனியாக இயங்கிய "கரைவாகு தெற்கு கிராமாட்சி மன்றம்" பின்வரும் கரைவாகு மேற்கு கிராமாட்சிமன்றம், கரைவாகு தெற்கு கிராமாட்சி மன்றம் மற்றும் கல்முனைப் பட்டிணசபை என்பனவற்றுடன் ஒன்றிணைக்கப்பட்டு கல்முனைப் பிரதேச சபையாக உருவாக்கப்பட்டமையே இதற்குப் பிரதான காரணமாகும். சாய்ந்தமருதுக்கென தனியான பிரதேச சபையின் அவசியப்பாடு தொடர்பாக மக்கள் மத்தியில் பல எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்ற நிலையினை காணலாம். உள்ளூராட்சி மன்றத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு சாத்தியமான பல விடயங்கள் காணப்பட்டாலும் அவற்றை அடைந்துக் கொள்வதில் பல இடர்களை எதிர்நோக்குகின்ற தன்மையே காணப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான தேவைப்பாடுகளைக் கண்டறிவதனை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வுப் பிரச்சினை

[133] Department of Political Science, South Eastern University of Sri Lanka.

வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வு அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு முறையினைக் கொண்ட விவரணப் பகுப்பாய்வாகும். இவ்வாய்வுக்கான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளாக வினாக்கொத்து, நேர்காணல் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்துக்கள் 1000: 1 எனும் அடிப்படையில் 121 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆவணங்கள், அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், கட்டுரைகள் மற்றும் இணையத்தள குறிப்புகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சாய்ந்தமருது மக்களுக்கான தனியான உள்ளூராட்சி சபையின் தேவைப்பாட்டின் நிலையினையும் அதன் உருவாக்கத்திலுள்ள சாதக, பாதக விளைவுகளையும் அடையாளம் காண்பதனை பிரதான நோக்கமாக கொண்டுள்ளது.

**Keywords:** உள்ளூராட்சி மன்றங்கள், கல்முனை மாநகரசபை, சேவை வழங்கல், சாய்ந்தமருதுப் பிரதேசம்

## ஆய்வின் அறிமுகம்

உள்ளூராட்சி மன்றங்கள் ஜனநாயகத்தின் உயிர்நாடியாக உள்ளன (சர்ஜுன் & றிபான், 2011). ஜனநாயக ஆட்சிமுறையுள்ள நாடுகளில் மத்திய அரசாங்கத்தின் ஆட்சி நிர்வாகப் பணிகளை மிகவும் இலகுவாக மேற்கொள்வதற்கும், நலன்புரி நடவடிக்கைகளை மக்களின் தேவைகளுக்கேற்ப இயங்கக்கூடிய ஒரு சட்டபூர்வமான அமைப்பாக, உள்ளூராட்சி மன்ற முறை காணப்படுகின்றது. ஒரு நாட்டினுள் சிறந்த நிர்வாகமொன்றை கொண்டுவருவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் மிகப் பிரதானப் பங்கினை வகிக்கின்றது. சட்டத்தின் மூலம் அனுமதியளிக்கப்பட்டுள்ள சேவைகளை வழங்கும் நடவடிக்கைகளை இவ உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொள்கின்றன.

உள்ளூராட்சி மன்றங்கள் ஜனநாயக ஆட்சி முறையின் பயிற்சிக் கூடங்களாக செயற்படுகின்றதோடு உள்ளூர் மக்களைப் பொறுத்த தத்தமது தேவைகளை தாமே நிறைவேற்றவும் சந்தர்ப்பத்தை வழங்குகின்றன. சில உள்ளூர் விடயங்களை மத்திய அரசாங்கத்தினை விட உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பாக செய்யக் கூடும். மத்திய அரசாங்கம் நாடு முழுவதற்குமான சில சேவைகளை ஆற்றி வருகின்றது. ஆனால், அச்சேவைகளை தன்னை விட உள்ளுாட்சி அங்கங்கள் சிறப்பாக செயற்படுத்தும் எனக் கருதுவதால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு சில அதிகாரங்களை வழங்கி அவ் உள்ளூராட்சி மன்றங்கள் அக்கடமைகளைச் சரிவர நிறைவேற்றுகின்றன (சிவராஜா, 2017).

இலங்கையில் மத்திய மற்றும் மாகாண சபைகள் என்பவற்றுக்கு அடுத்தபடியாக உள்ள ஆட்சி அமைப்பாக உள்ளூராட்சி மன்றங்கள் அமைந்துள்ளன. இதன் மூலம் உள்ளூர் மட்டத்தில் மக்களின் தேவைகளை இனங்கண்டு நிறைவேற்றுவதற்கான ஒரு பொறிமுறையாகவும் இது அமைந்துள்ளது. அதிலும் குறிப்பாக, இலங்கையின் உளளூராட்சி மன்ற படிமுறைகளில் மூன்றாவது மட்டத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்பாக பிரதேச சபை காணப்படுகின்றது.

அம்பாறை நிர்வாக மாவட்டத்தின் தேர்தல் தொகுதியில் தனி முஸ்லிம் மக்களைக் கொண்டிருக்கும் சாய்ந்தமருது பிரதேசமானது தமக்கென ஒரு உள்ளூராட்சி மன்றத்தினைப் பெற்றுத்தருமாறு பல வருடங்களாக கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றது (நூறுல்ஹக், 2017). கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களாக கல்முனை, கல்முனைக்குடி, இஸ்லாமாபாத், சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, மருதமுனை, சாய்ந்தமருது, பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, மணற்சேனை, துறைவேந்தியமடு என்பன காணப்படுகின்றன. இதன் கிழக்கு எல்லையாக வங்காள விரிகுடாகடலினையும், வடக்கு எல்லையாக பெரிய நீலாவணையும், தெற்கே காரைதீவு, சம்மாந்துறை பிரதேச சபைகளினையும், மேற்கே துறைவேந்திய மேட்டை அண்மித்த கோட்டை ஆற்றினையும் குறிப்பிடலாம் (Milhana & Nufile, 2016).

பண்டைய கல்முனையின் நிர்வாக எல்லையானது மூன்று நிர்வாக கிராம சபைகளையும் ஒரு பட்டின சபையையும் கொண்டிருந்தது. கரைவாகு வடக்கு கிராம சபை கல்லாறு, துறைநீலாவணை, பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு கிராமங்களைக் கொண்டிருந்தது. இருப்பினும் 1960 களில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்ட போது கல்லாறும் துறை நீலாவணையும் மட்டக்களப்பு மாவட்டத்தோடு இணைக்கப்பட்டன. கரைவாகு மேற்கு கிராமாட்சி மன்றம் நற்பிட்டிமுனை, மணற்சேனை, சேனைக்குடியிருப்பு துறைவேந்தியன்மேடு ஆகிய கிராமங்களை

உள்ளடக்கியதாகவும் கரைவாகு தெற்கு கிராமாட்சி மன்றம் சாய்ந்தமருது கிராமத்தை உள்ளடக்கியதாகவும் கல்முனைப் பட்டின சபையின் எல்லையானது கல்முனை சனிட்டரி போட்டின் எல்லையாக அதாவது தாளாட்டுவான் வீதி முதல் கல்முனை ஸாஹிரா வீதி வரையானது என கல்முனை வரலாற்றுப் பதிவுகள் சுட்டிக்காட்டுகின்றன (வீரகேசரி, 2019). 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ் 4 உள்ளூராட்சி மன்றங்களும் ஒன்றிணைக்கப்பட்டு கல்முனை பிரதேச சபை தோற்றம் பெற்றது. கல்முனை பிரதேச சபை 1988 ஆம் ஆண்டிலே தோற்றம் பெற்றது. 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரதேச சபை நகரசபையாக தரமுயர்த்தப்பட்டது. 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் திகதி நகர சபையாக காணப்பட்ட கல்முனை நகர சபை மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டது (பறக்கத்துல்லாஹ், 2015).

இவ்வாறு தரமுயர்த்தப்பட்டதனையடுத்து 1988 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி மன்றம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருவதனைக் காணலாம். சாய்ந்தமருது மக்கள் எதிர்பாாத்த பிரதேச செயலகம் கிடைக்கப் பெற்றாலும் உள்ளூராட்சி மன்றம் கிடைக்காமையினால் ஏமாற்றமடைந்த மக்கள் ஜனநாயக ரீதியாக பல்வேறு எதிர்பார்ப்புகளையும் மற்றும் ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொண்டதோடு நவம்பர் 01 ஆம் திகதி பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து உள்ளூராட்சி சபை போராட்டத்தினை மேற்கொண்டனர் (உண்மைகளும் ஆவணங்களும், 2019).

இவ்வாறு புதிய பிரதேச சபையினைப் பெற வேண்டும் எனும் அவா 30 வருடகாலமாக முன்வைக்கப்பட்டு வந்தாலும் அதனை பெற்றுக் கொள்ள சாய்ந்தமருது பிரதேச மக்கள் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளும் ஏதொவொரு வகையில் மழுங்கடிக்கப்பட்டு வருகின்ற நிலையினையே காணலாம். அம்மக்கள் இவ்வுள்ளூராட்சி மன்றத்தினை அடைந்துக் கொளள வேண்டும் என்பதற்கான அவசியப்பாட்டையும் அதிலுள்ள சிக்கல்களையும் அடையாளம் காணும் வகையில் இவ்வாய்வு அமையப் பெற்றுள்ளது.

## முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு

தற்கால ஜனநாயக அரசாங்கங்களில் அதிகமாக அதிகாரத்தினை உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு பன்முகப்படுத்தி, அதனூடாக சேவை வழங்கலினை மேற்கொண்டு வருகின்றன. இத்தகைய ஆட்சியியல் செயன்முறையில் அதிகாரப் பன்முகப்படுத்தல் (Decentralization) என்பது பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்த எண்ணக்கருவாக உள்ளன (இஹ்ஜாஸ், சிவக்குமார், பௌசர், & ரமீஸ், 2015).

இது உள்ளூர் அரசாங்கத்தின் இயலுமையை அதிகரிக்கச் செய்கின்றது. மேலும், அதிகாரச் சமநிலை, வினைத்திறன் என்பன ஏற்படும் வகையில் செயற்படுவதோடு, உள்ளூர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் உதவுகிறது. மக்களின் அரசியல் பங்களிப்பினை அதிகரிப்பதுடன் பன்மைத்துவத்தையும் மாற்றங்களையும் ஏற்படுத்த உதவுகிறது (Miller, 2002).

ஒரு நாட்டின் மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகளுடன் மக்களால் நேரடியாகத் தொடர்புகளை ஏற்படுத்த முடியாது. எனினும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்கின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்திருக்கும் தாபனமாக உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படுகின்றன. உள்ளூரில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி வருகின்ற வேலைத்திட்டத்திற்கு உதவுவதை, உள்ளூராட்சி மன்றங்களின் ஒற்றுமை மூலமாக ஈடேற்ற முடியும் (சர்ஜுன் & றிபான், 2011).

உள்ளூராட்சி அரசாங்கம் (Local Government) என்பது கிராம மற்றும் பிரதேச மட்டங்களில் மக்கள் தமது தேவைகளை தாமே நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் அவ்வவ் பிரதேசத்தில் நிறுவப்படும் அடிப்படை ஜனநாயக அமைப்பு முறை என விளங்கிக் கொள்ளலாம். இதன் மூலம் மக்கள் அரசியலில் பங்குப்பற்ற முடிவதோடு ஜனநாயக

ஆட்சிமுறையின் பயிற்சியினையும் பெற்றுக் கொள்கின்றனர் (றயீசுதீன், 2014). ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்ட அவ்வெல்லைக்குள் வாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பான பணிகளை ஆற்றுகின்ற மூன்றாம் மட்ட அரசாங்கமாக உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படுகின்றன (Mahwood, 1983).

உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய ஆட்சியின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படும். இருப்பினும் அரசியலமைப்பாயினும், உள்ளூர் அரசாங்கத்துக்கு மேலாக ஓர் உயராட்சி காணப்படுகின்றது. இவ் உயர் ஆட்சியை அமைக்கும் பொறுப்பும் மக்களிடமே உள்ளன. அந்தவகையில், மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழும், அதன் மேற்பார்வைக்குட்பட்ட அமைப்பாகவும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைந்துளளன (ஞானப்பிரகாசம், 1986).

இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்கள் ஆரம்ப காலத்தில் கிராமத்தை அடிப்படையாக் கொண்டு காணப்பட்டாலும் இன்றுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளினால் உருவாக்கப்பட்டவையாகும் (அபேரத்ன, 2007). Sri Lankan Profile (2016/2017) எனும் இணையத்தளத்தில் இலங்கை ஓர் ஜனநாயக சோசலிச குடியரச நாடாகும் என்பதனையும் தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மனறம் என வகைப்படுத்தப்பட்டு மக்களுக்கு சேவைகளை வழங்குகின்றன என்பதையும் குறிப்பிட்டுள்ளது. இலங்கையில் காணப்படும் உள்ளூராட்சி மன்றங்களாக பின்வருவன அமைந்துள்ளன. அவையாவன: மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை என்பனவாகும். நகரமயமாக்கலில் மிக உயர் மட்டத்தில் நிலவும் பிரதேசங்களில் மாநகர சபைகள் அமைந்துள்ளன. நகரமயமாக்கல் குறைந்த பிரதேசங்களில் நகர சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. கிராமியப் பிரதேசங்களில் பிரதேச சபைகள் அமைந்துள்ளன (அபேரத்ன, 2007).

நூறுல்ஹக் (2017) ‘எழுதிய யார் துரோகிகள்? சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை’ எனும் ஆய்வுக் கட்டுரையில் தனியான உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை அரசியல்வாதிகளின் நகர்வுகள், உள்ளூராட்சி மன்றம் ஏன் அவசியம்? ஜும்மா பள்ளிவாசவின் நகர்வுப் பற்றியப் பார்வை, நமது மக்களின் தியாகம் என்பனப் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் பணிமனை (2019) உண்மைகளும் ஆவணங்களும் எனும் நூலில் உள்ளூராட்சி சபைக் கோரிக்கை வரலாறு, நகர சபைக் கோரிக்கை சம்பந்தமாக பல்வேறு தரப்பினராலும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள், சாய்ந்தமருதுக்கான நகர சபை வழங்கப்பட வேண்டுமென நிறைவேற்றப்பட்ட வாக்குறுதிகள், தேர்தல் வெற்றியும் ஜனநாயக ரீதியாக மக்கள் வழங்கிய அங்கீகாரமும், சாய்ந்தமருது நகர சபை பிரிவதனால் கல்முனைக்கு பாதிப்பு ஏற்படாது என்பதனை நிரூபித்தல் மற்றும் உள்ளூராட்சி சபைகள் பிரகடனப்படுத்தல் சம்பந்தமான சட்டங்கள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

நாம் சொல்வதெல்லாம் உண்மை உண்மையைத் தவிர வேறில்லை (n.d) எனும் கட்டுரையில் உள்ளூராட்சி வரலாறு, தனியான உள்ளூராட்சி சபைக் கோஷம், கோரிக்கைக்கான முன்னெடுப்புகள், சாய்ந்தமருது உள்ளூராட்சி சபைக் கோரிக்கையும் 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலும் பிரதமரின் வாக்குறுதியும் எனும் தலைப்பில் எழுதப்பட்டுள்ளது.

எனவே புதிய உள்ளூராட்சி மன்றம் உருவாக்கல் தொடர்பாகவும் அதன் அவசியப்பாட்டின் தன்மை தொடர்பான ஆய்வுகள் குறைந்த மட்டத்திலே காணப்படுவதனாலும் புதிய பிரதேச சபையின் எதிர்ப்பார்ப்புக்களையும் அதிலுள்ள தாக்கங்களையும் அறிவதற்கான விரிவான ஆய்வுகள் இடம்பெறவில்லை. இவ் இடைவெளியினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரச்சினை

1988 இலிருந்து 2018 வரையான காலப்பகுதியில் சுமார் முப்பது வருட காலமாக சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி மன்றம் வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது. அப்பிரதேசத்துக்கென தனியான பிரதேச செயலகம் வழங்கப்பட்டாலும் அதன் சனத்தொகைக்கேற்ப கல்முனை மாநகர சபையிலிருந்து சேவைகளை பெற்றுக்கொள்வது என்பது பெரும் சவாலாகவே உள்ளது. இதனால்,

சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி மன்றத்தைப் பெறறுக் கொள்வதற்கான கோரிக்கைகள் வலுவடைந்துள்ளன. உள்ளூராட்சி மன்றத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியப்பாடு குறித்து மக்களும், புத்திஜீவிகளும் பல வருடங்களாக கருத்துக்களை தெரிவித்து வந்தாலும் அதனைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் தன்மையே காணப்படுகின்றது. அப் பிரதேச சபையினை பெற்றுக் கொளவதற்கு அவசியப்பாடுகளையும் அதற்கெதிராக குறிப்படும் கருத்துக்களையும் ஆராய்வதாக உள்ளது. இதனை அடிப்படையாக கொண்டே இவ்வாய்வு பிரச்சினை வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆய்வின் நோக்கங்கள்

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. சாய்ந்தமருதுக்கான தனியான பிரதேச சபையினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்வைக்கும் காரணங்களைக் கண்டறிதல்.


2. புதிய பிரதேச சபை உருவாக்கத்தின் சாதக, பாதக விளைவுகளைக் கண்டறிதல்.


### ஆய்வு முறையியல்

இவ்வாய்வு அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகள் நேர்காணல், வினாக்கொத்து போன்ற நுட்பங்களிலிருந்தும் பெறப்பட்டுள்ளன. நேர்காணல் எனும் போது 1000:1 எனும் அடிப்படையில் சாய்ந்தமருது பிரதேசத்திலிருந்து 31057 மக்களிடம் இருந்து 32 வினாக்கொத்துக்களும் கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகப்பிரிவு மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்பவற்றின் சனத்தொகை முறையே 51413, 36346 ஆகும். அதற்கேற்ப முறையே 52, 37 வினாக்கொத்துக்களும் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமாக 117 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு 121 வினாக்கொத்துக்கள் பெறப்பட்டுள்ளன. மேலும், உள்ளூராட்சி மன்றம் தொடர்பாக இயற்றப்பட்டுள்ள சட்டங்கள், அரசாங்க சுற்றுநிரூபங்கள், அரசாங்க அறிக்கைகள் என்பவற்றிலிருந்தும் முதலாம் நிலைத் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆவணங்கள், நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், கட்டுரைகள் மற்றும் இணையத்தள குறிப்புகளிலிருந்தும் பெறப்பட்டுள்ளன.

### ஆய்வுப் பிரதேசம்


சாய்ந்தமருதுப் பிரதேசம் என்பது கிழக்கு மாகணத்தின் கரைவாகுப்பற்று பிரதேசத்தில் நீண்டகால வரலாற்றினை உடைய ஒரு பழம் பெரும் கிரமமாகும் (Ariff, 2015). கல்முனை நகரின் தெற்கு எல்லையில் சாய்ந்தமருது பிரதேசம் அமைந்துள்ளது. இப்பிரதேசம் வடக்கே கல்முனையையும் தெற்கே மாளிகைக்காடு கிராமத்தையும் கிழக்கே கடலையும் மேற்கே கரைவாகு வட்டை வயல் நிலத்தையும் நீர் வாவியையும் எல்லையாகக் கொண்டுள்ளது (பறக்கத்துல்லாஹ், 2015). சாய்ந்தமருது 1 – 17 வரையான கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில் 31057 முஸ்லிம்கள் வாழ்கின்றனர் (பிரதேச செயலகம், 2018). இப்பிரிவில் 8390 குடும்பங்கள் வசிக்கின்றனர். இதில் 15040 பெண்களும், 15402 ஆண்களும், மொத்தமாக 30442 சனத்தொகையாகக் காணப்படுகின்றது. இம்மக்கள் பிரதான தொழிலாக விவசாயம், மீன்பிடி, சிறு கைத்தொழில், வர்த்தகம் மற்றும் அரச தொழில்களில் ஈடுபடுகின்றனர்.




(மூலம்: Divisional Secretariat, 2019)

**சனத்தொகை பற்றிய விபரம்**




(மூலம்: Divisional Secretariat, 2019)


1988 களில் மக்கள் பிரதேச சபை வேண்டும் என அழுத்தம் கொடுத்தனர். அக்காலத்தில் இக்கிராமம் 7 கிராம சேவகப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இருந்தது. பின்னர் 1989ம் ஆண்டு சனத்தொகை அதிகரிப்பை காரணம் காட்டி அப்போதைய அரசாங்கத்தின் கீழ் CO, KAVIS போன்ற உததியோகத்தர்களை நியமித்து அதிகாரப் பரவலாக்கத்திற்காக 17 பிரவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது அஷ்ரப் அவர்களினால் 1999 டிசம்பர் 19 ஆம் நாள் கல்முனைப் பிரதேச செயலகத்தின் உப அலுவலகமாக அமைக்கப்பட்டது. பின்னர் 2001 பெப்ரவரி 4 ஆம் திகதி தனியான பிரதேச செயலகமாக தரம் உயர்த்தப்பட்டது (கலாசார சபை பிரதேச செயலகமம், 2008)

**பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

சாய்ந்தமருது பிரதேச மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதிலும் பல்வேறுபட்ட இன்னல்களை எதிர்நோக்குகின்ற தன்மையினைக் காணலாம். ஊருக்கென தனியான உள்ளூராட்சி சபையினைப் பெற்றுக்கொண்டால் மாத்திரமே அபிவிருத்தி திட்டங்கள், வளப்பகிர்வு என்பன உரிய முறையில் நிறைவேற்ற முடியும் என்ற அடிப்படையிலே இக்கோரிக்கை பலமடைந்துள்ளது. ஆரம்பகாலத்தில், தனியான உள்ளூராட்சி மன்றம் காணப்பட்டாலும் 1987களுக்கு பிற்பாடே இரண்டு கிராமாட்சி மன்றங்களுடனும் ஒரு பட்டின சபையுடனும் இணைந்து கல்முனை பிரதேச சபையாக உருவெடுத்தது. அவ்வாறன்றி தனித்து நின்று செயற்படுவதன் மூலமே மக்களின் தேவைகள் நிறைவேற்ற முடியும் என்பது சாய்ந்தமருது மக்களின் எதிர்பார்ப்பாகும்.

வரைபடம் 1.1

புதிய உள்ளூராட்சி முறையின் அவசியம் குறித்த பகுப்பாய்வு




(மூலம்: களஆய்வு, 2018).

தெரிவு செய்யப்பட்ட மாதிரிடையே புதிய உள்ளூராட்சி முறையின் அவசியம் தொடர்பாக வழங்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் பகுப்பாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் ஆம் என 31 பேரும் இல்லை என 00 பேரும் குறிப்பிட்டுள்ளனர். கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் ஆம் என 24 பேரும் இல்லை என 29 பேரும் குறிப்பிட்டுள்ளனர். கல்முனை தமிழ் உப பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் ஆம் என 23 பேரும் இல்லை என 14 பேரும் குறிப்பிட்டுள்ளனர். சாய்ந்தமருதுக்கென புதிய உள்ளூராட்சி முறை அவசியம் என்பதை இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அவ்வடிப்படையில் மொத்தமாக ஆம் என 78 பேரும் இல்லை என 43 பேரும் குறிப்பிட்டுள்ளனர்.

அந்தவகையில் புதிய பிரதேச சபை உருவாக்குவதில் சாய்ந்தமருது பிரதேச மக்கள் கூறும் அவசியத்தின் தன்மையினை பின்வருமாறு நோக்கலாம்.

1. குறைந்த சனத்தொகை கொண்ட பிரதேசங்களுக்கு உள்ளூராட்சி மன்றம் வழங்கப்பட்டுள்ளமை

   1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட சாய்ந்தமருக்கான தனியான சபையினை வலுக்கட்டயாமாக கல்முனைப் பட்டின சபையுடன் இணைத்ததனாலேயே இப்பிரச்சினை உருவாகியது. குறைந்த சனத்தொகை கொண்ட லகுகலை (8000) க்கு பிரதே சபை, காரைதீவு (11000) தனியான பிரதேச சபை வழங்கப்படுமாகயிருந்தால் சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி மன்றத்தை ஏன் வழங்க முடியாது என்ற கேள்வி ஏற்பட்டதன் விளைவாகவே, தனியான உள்ளூராட்சி சபையின் அவசியம் உணரப்பட்டது (நூறுல்ஹக், 2017). எல்லைகளை வரையறுத்துக் காணப்படும் சாய்ந்தமருது பிரதேசத்துக்கு உள்ளூராட்சி மன்றம் என்பது அவசியமான ஒன்றாக நோக்கப்படுகின்றது. கல்முனை மாநகர சபையில் அங்கத்துவம் வகித்த இப்பிரதேச உறுப்பினர்களுக்கிடையே தோன்றிய மனக் கசப்புக்களும் உள்ளூராட்சி மன்றத்தின் அவசியத்தினை துரிதப்படுத்துகின்றன.

2. அபிவிருத்தி திட்டங்கள், வளப்பகிர்வு
   மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவே உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்படுகின்றன. அதன் மூலமே அபிவிருத்தி மற்றும் ஏனைய செயற்பாடுகள் செயற்படுத்த முடியும். ஆனால், சாய்ந்தமருதுக்கான சேவைகள் கல்முனை மாநகர சபையில் உரிய முறையில் வழங்கப்படாததன் விளைவாகவே சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி மன்றத்தைப் பெற வேண்டும் என்ற கோரிக்கை முனவைக்கப்படுகின்றது.

கல்முனை மாநகர சபையில் நிலவும் வளப்பற்றாக்குறை, ஆளணி குறைபாடு என்பன பிரதான காரணமாகும். மேலும் 1/3 சனத்தொகை கொண்ட பிரதேசங்களுக்கு கூட உள்ளூராட்சி மன்ற முறை செயற்பட்டு வருகின்றமையை காணலாம். அதன் மூலம் அப்பிரதேச மக்கள் தங்களது பிரதேசத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். தனியான பிரதேச சபை காணப்பட்டால் அப்பிரதேச மக்களின் அபிலாஷைகளை தாங்களே உருவாக்கி நிறைவேற்ற முடியும்.


3. சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கெள்ள முடியும்

சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி சபை வழங்கப்பட்டால் கல்முனை மாநகர சபையின் சுமை குறையும். அத்தோடு கல்முனை நகரத்தை அபிவிருத்தி செய்யக் கூடிய நிலை உருவாகும். ஏனெனில் கல்முனை மாநகர சபையில் காணப்படும் 11 கிராமங்களுக்கும் சேவைகளை பகிர்ந்தளிப்பதும் என்பது இயலாத காரியமாகும். சாய்ந்தமருது பிரிந்தால் தான் கல்முனை பலமடையும் என்பது எனது கருத்தாகும். ஆனால், அவை பிரிக்கப்படுமாயிருந்தால் பழைய முறையிலே பிரிக்கப்பட வேண்டும் என மக்கள் குறிப்பிடுவதனைக் காணலாம்.

சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபையினை வழங்குவதன் மூலமே சேவைகளை இலகுபடுத்தவும் குறுகிய எல்லைகளாக மாறுகின்ற போது அதற்கான வளங்களைப் பெருக்கவும் ஆளணிகளை அதிகரிக்கவும் முடியும். பெரும் பரப்பளவைக் கொண்ட கல்முனை மாநகரசபையில் சுமைகளின் பாரம் அதிகரித்துச் செல்வதைக் குறைக்கலாம். மேலும், உள்ளூர் அரசியல் அதிகாரத்தை அடையாளப்படுத்தவும் முடியும். பிரதேச அபிவிருத்தி, மின்னொளி ஊட்டுதல், பிரதேச மேம்பாடுகளை முன்னிறுத்தி செயறபடுதல் மற்றும் பல நடவடிக்கைகளுக்கும் கல்முனை மாநகர சபையிலிருந்து சாய்ந்தமருது பிரிய வேண்டும் என இப்பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

புதிய உள்ளூராட்சி சபையை உருவாக்குவதற்காக 2017.08.02 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் ஒரு உள்ளூராட்சி சபையை ஏற்றுக் கொள்வதற்கு விஞ்ஞான ரீதியான வரையறைகளை முனைவைத்தது. சனத்தொகை அடர்த்தி, தனியான பிரதேச செயலகம், தனியான ஏனைய நிறுவனங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளது. அந்தவகையில் சாய்ந்தமருது பிரதேசம் உள்ளூராட்சி மன்றத்தினை பெறுவதற்கு தேவையான இயலுமை காணப்படினும் ஒரு சில காரணங்களுக்காக வழங்கப்படாமலிருப்பது கவலைக்குரியதாகும்.

புதிய பிரதேச சபை உருவாக்கத்தின் மூலம் இலகுவான சேவைகளை பெற முடியுமா என்பது குறித்த பகுப்பாய்வு




(மூலம்: களஆய்வு, 2018)

தெரிவு செய்யப்பட்ட மாதிரிடையே புதிய பிரதேச சபை உருவாக்கத்தின் மூலம் இலகுவான சேவைகளை பெற முடியுமா என்பது தொடர்பாக வழங்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் பகுப்பாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஆம் என 91 பேரும் இல்லை என 30 பேரும் குறிப்பிட்டுள்ளனர். இதன்படி, புதியபிரதேச சபை

உருவாக்கத்தின் மூலமே இலகுவான சேவைகளை பெற முடியும் என இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.


கல்முனை மாநகர சபையிலிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் சாய்ந்தமருது பிரதேச மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி சபை வழங்கப்பட்டால் தான் சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நிலை மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

4. உள்ளூர் அரசியல் அடையாளத்தை பிரதிபலித்தல்
இலங்கை முஸ்லிம் வரலாற்றில் காணமுடியாத ஒரு நகர்வாகவே இவ் நவம்பர் புரட்சி போராட்டம் அமைந்துள்ளது. அத்தோடு, மக்கள் வாழும் பிரதேசங்களில் ஜனநாயக ரீதியான விழிப்பூட்டல்கள் மெற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக இளைஞர்களின் செயற்பாடுகளே மேலோங்கிக் காணப்படுகின்றது. நவம்பர் புரட்சியின் போது ஒரு சில அரசியல்வாதிகளின் பொம்மைகளும் எரிக்கப்பட்ட தன்மையை காணலாம். அரசியல்வாதிகளின் பொறுப்பற்று வழங்கப்பட்ட வாக்குறுதிகளே இப்போராட்டங்களை மேற்கொள்ள வழிவகுத்தது. தேர்தல் ஆரம்பத்தில் உள்ளூராட்சி மன்றத்தைப் பெற்றுத் தருவோம் எனக்கூறி பின்பு வாக்குகளை பெற்றதும் ஏமாற்றும் நடவடிக்கைகளே காணப்படுகின்றது (மக்கள் பணிமனை, 2019).

சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபை கோரிக்கையானது ஆரம்ப காலம் தொட்டு மேற்கொள்ளப்பட்டாலும், வழங்கப்படவில்லை. ஆனால், மனோ கணேசன் அவர்கள் நுவரெலியாவில் புதிய உள்ளூராட்சி மன்றத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தமை பாராட்டத்தக்கதாகும். இன்று, நுவரெலியாவில் நான்கு புதிய உள்ளூராட்சி மன்றங்களாக பிரிக்கப்பட்டுள்ளமை இதற்கு சான்றாக குறிப்பிடலாம். ஆனால், சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றத்தை பல அரசியல் வாதிகள் தெரிவித்து வந்தாலும் வழங்கப்படாமை பாரிய குறைபாடகவே நோக்கப்படுகினறது (நூறுல்ஹக், 2017).

5. கல்முனை மாநகர சபைத் தொடர்பாக மக்கள் மத்தியில் காணப்படும் அதிருப்தி
கல்முனை மாநகர சபையின் சேவை வழங்கலில் மக்கள் பல நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். அவையாவன, கழிவு முகாமைத்துவம், சுற்றுச் சூழல், சுகாதாரம், நுளம்புப் பெருக்கமும் கட்டுப்பாடும் மலசலகூட கழிவு முகாமைத்துவம், அனர்த்த முகாமைத்துவம், பாதைகள் அபிவிருத்தி, மைதானங்கள் அபிவருத்தி, பூங்காக்கள் பராமரிப்பு, தெருவிளக்கு பராமரிப்பு என்பனவாகும். மேலும், கல்முனை மாநகரசபையினால் மக்கள் பல்வேறு தடைகளை எதிர்நோக்குகின்றனர். அந்தவகையில், அதிகாரிகளின் அலட்சியப் போக்கு, நவீன வசதியின்மை, திண்மக் கழிவகற்றல் பிரச்சினை, பூங்காக்கள் உரிய முறையில் பராமரிக்கப்படாமை, வளங்களை பகிர்ந்தளிப்பதில் பாரபட்சம் காட்டுதல், மக்களின் பங்களிப்புடன் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படாமை மற்றும் மக்கள் விழிப்புணர்வின்மை என்பன மிகப் பிரதான காரணங்களாக ஆராயப்படுகின்றன.

கல்முனை மாநகர சபையின் செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்ட விதம் தொடர்பான பகுப்பாய்வு




(மூலம்: களஆய்வு, 2018).

தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளிடையே கல்முனை மாநகர சபையின் செயற்பாடுகளின் பூர்த்தி செய்யும் தன்மை தொடர்பாக வழங்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் இப்பகுப்பாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலே உள்ள வரைபடத்தின் அடிப்படையில் நோக்கும் போது மக்கள் மத்தியில் மாநகரசபையின் செயற்பாடுகள் பூர்த்தி செயயப்படாத நிலையிலே அமைந்திருப்பதனைக் காணலாம்.

அதன் பிரகாரம், சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் ஆம் என 02 பேரும் இல்லை என 21 பேரும் கூறமுடியாது எனும் அடிப்படையில் 08 பேரும் குறிப்பிட்டுள்ளனர். கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் ஆம் என 11 பேரும் இல்லை என 32 பேரும் கூறமுடியாது எனும் அடிப்படையில் 10 பேரும் குறிப்பிட்டுள்ளனர். கல்முனை தமிழ் உப பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் ஆம் என 06 பேரும் இல்லை என 20 பேரும் கூறமுடியாது எனும் அடிப்படையில் 11 பேரும் குறிப்பிட்டுள்ளனர்.

மொத்தமாக வழங்கப்ட்ட தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் ஆம் என 19 பேரும் இல்லை என 73 பேரும் கூறமுடியாது என 29 பேரும் குறிப்பிட்டிருப்பதை இவ்வாய்வின் மூலம் நோக்கலாம். கல்முனை மாநகர சபையின் சேவை வழங்கலின் நிலையானது 11 பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு, பொதுச் சேவை வழங்கல் தொடர்பில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதனைக் இவ்வாய்வின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

- பொது ஊழியர்களினால் அலட்சியப்படுத்தல்
- நவீன வசதியின்மை
- கழிவகற்றல் நெருக்கடி
- வளங்களை பகிர்ந்தளிப்பதில் பாரபட்சம்
- மக்கள் பங்களிப்புடன் அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்படுதல் போன்றவை தொடர்பில் மக்கள் அதிருப்தி அடைந்திருப்பதனைக் காணலாம்.

6. அரசியல்வாதிகளின் செயற்பாடு


தனியான உள்ளூராட்சி சபையினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலை 2014 ஆம் ஆண்டு காலப்பகுதிகளிலே தீவிரமடைந்தது. 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்குகளின் படி கல்முனை மாநகர சபைக்கு மேயராக சிராஸ் மீராசாஹிப் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்தது. இருப்பினும், வெற்றிப்பெற்ற முஸ்லிம் காங்கிரஸ் தனது முதல் நிலை வேட்பாளராக நிசாம் காரியப்பர் அவர்களுக்கு மேயர் பதவி வழங்கப்படும் எனக் கூறியதன் விளைவால் யாருக்கு மேயர் பதவி வழங்குவது என்பதில் சிக்கல் தன்மை ஏற்பட்டது. இதன் காரணமாக தெரிவு செய்யப்பட்ட சிராஸ் மீராசாஹிபை மேயராக நியமிப்பதில் தயக்கம் காட்டியமையானது புதிய

உள்ளூராட்சி மன்றம் அமைய வேண்டும் என்பதில் முக்கிய பேசுபொருளாகியது. இருப்பினும் இரண்டரை வருடங்களாக பதவி வகித்தாலும் பின்னர் அப்பதவியை கட்சி முதனிலை வேட்பாளருக்கு வழங்கப்பட்டது. இந்நிலையே சாய்ந்தமருது வாழ் மக்களின் உள்ளூராட்சி மன்றத்தின் அவசியத்தை பெற வேண்டும் என்பதில் அறிவை தூண்டிய விடயமாகும். தங்களால் பூரணமாக வாக்களித்து பெற்ற மேயர் பதவியினையும் குறுகிய காலத்தில் இழந்ததோடு அவ்வூர் மக்கள் அபிவிருத்தி பணியிலும் பின்தள்ளப்பட்டார்கள்.

7. 2018 ஆம் ஆண்டைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வெற்றி
சாய்ந்தமருது மக்கள் வெற்றியீட்டியப் பின்னர் தேசியளவில் ஒன்றிணைந்துபோராடியுள்ளனர் என்பதனையும், சாய்ந்தமருதுப் பிரதேசம் கல்முனை மாநகரசபையிலிருது பிரிந்தாலும் எவ்வித ஆபத்தும் ஏற்படாது என்பதனையும் நிரூபித்துள்ளது. மேயர் தெரிவு இடம்பெற்ற காலகட்டத்தில் சாய்ந்தமருதில் இருந்து தெரிவு செய்யப்பட்ட எந்த உறுப்பினர்களும் கல்முனை மாநகரசபை அமர்வுக்கு செல்லவில்லை. இதன் மூலம் குறிப்பிடப்படுவது என்னவென்றால், சாய்ந்தமருதுப் பிரதேச உறுப்பினர்கள் மாநகர சபையில் அங்கம் வகிக்காவிட்டாலும், முஸ்லிம் மேயரே பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார் என்பதை வெளிக்காட்டுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளனர். எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்பதை இத்தேர்தல் முடிவுகள் நிரூபித்துள்ளது.

மேலும் மருதூர் எழுச்சியே இவ்வெற்றிக்கு பிரதான காரணமாகும். சாய்ந்தமருது மக்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து உள்ளூராட்சி மன்றத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலையை உருவாக்கியது. 85-90 வீதமான மக்களை ஒற்றுமைப்படுத்தியதோடு உள்ளூராட்சி மன்றத்தின அவாவினை வெளிப்படுத்துவதற்கு இப்புரட்சியின் விளைவே தேர்தல் வெற்றிக்கு காரணமாகும். மேலும், இலங்கை தேர்தல் வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்பு முனையாகவும் பார்க்கப்படுகின்றது.

புதிய உள்ளூராட்சி மன்றத்தை பெற இத்தேர்தல் வழிவகுத்ததா என்பது தொடர்பான பகுப்பாய்வு




(மூலம்: களஆய்வு, 2018).

தெரிவு செய்யப்பட்ட மாதிரிடையே தேர்தல் முறை புதிய உள்ளூராட்சி மன்றத்தை பெறுவதற்கு அடித்தளமாக அமையப்பெற்றதா என்பது தொடர்பாக வழங்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் பகுப்பாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஆம் என 66 பேரும் இல்லை என 55 பேரும் குறிப்பிட்டுள்ளனர். இதன்படி கல்முனை மாநகர சபை தேர்தல் புதிய உள்ளூராட்சி மன்றத்தை பெற வழிவகுத்ததாஎன்பது தொடர்பாக மக்கள் பெரும்பாலும் ஆம் என குறிப்பிட்டிருப்பதானது மன்றத்திறகான சாத்தியப்பாட்டையே எடுத்துக்காட்டுவதாக இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

இவ்வுள்ளூராட்சிமன்றத்தினைப் பெற்றுக் கொள்வதில் சில தடைகளும் காணப்படுகின்றன. அவற்றினை பின்வருமாறு அடையாளப்படுத்த முடியும்.

1. கல்முனை மாநகரசபை பிரிப்பு தொடர்பான விபரம்

சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபையினைப் பெற வேண்டுமாயின் முஸ்லிம்களின் தலைநகரமாகப் போற்றப்படுகின்ற கல்முனைப் பிரதேசத்தை ஏனைய

சமூகத்தினரிடம் இழப்பதற்குப் பிரதான காரணமாக அமைய முடியும். எல்லை வரையறுப்புடன் நான்காகப் பிரிக்கப்பட்டால் மட்டுமே கல்முனை மாநகரம் பெரும்பாலும் முஸ்லிம்களிடமிருந்து பறிபோகமல் தடுக்க நடவடிக்கை எடுக்க முடியும். ஏனெனில், கல்முனை மாநகர சபையை நான்காகப் பிரிக்கப்பட வேண்டும் என்பதையேய இறுதியாக இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நிருபித்துள்ளன. இறுதியாக இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கல்முனை மக்கள் ஒரு அரசியல் கட்சியை முன்னிறுத்தி தமது வாக்குகளை அளித்திருந்தனர். இதற்கான பிரதான காரணம், கல்முனையை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவாகும்.

2. அரசியல் கட்சிகளின் இழுபறி

சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபையை பெற்றுத் தருவோம் என வாக்குறுதியளித்தாலும் அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை அரசியல் அதிகாரத்தை தக்க வைக்கும் நடவடிக்கையாகவே நோக்கப்படுகின்றது. மேலும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் தமக்கான விடிவுக்காலம் ஏற்படும் என எதிர்பார்த்துக்கொண்ருந்த மக்களிடையே வழங்கப்படாமை கட்சிகள் மீது காணப்பட்ட நம்பிக்கையை மழுங்கடித்துள்ளன. சாய்ந்தமருதுக்கான புதிய உள்ளூராட்சி மன்ற கோரிக்கை தொடர்பாக கட்சிகள் ஒன்றிணைந்து கலந்துரையாடி தீர்வுகளை வழங்காது காலம் தாழ்த்துகின்றனர். இதன் காரணமாக சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி சபையை வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் இணக்கப்பாடாற்ற தன்மையே காணப்படுகின்றது.

3. முஸ்லிம்களின் தலைநகரம் பறிபோகும் என்ற அச்சம்

சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி சபை வழங்கப்பட்டால் கல்முனை மாநகரம் தமிழர்களின் ஆளுகைக்கு உட்படும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. ஏனெனில் தேர்தல் காலங்களில் வாக்களிக்கும் போது முஸ்லிம் கட்சி பலவற்றுக்கு தமது ஆதரவினை வழங்கும் போது வாக்குகள் பிரிபடுகின்ற நிலை காணப்படுகின்றது. அதனால், ஆட்சியமைப்பதில் பாரிய சிக்கலை ஏற்படுத்தும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

4. மக்களின் மனோநிலை

கல்முனை மாநகரசபைக்குட்பட்ட ஒரு சில மக்கள் சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபை வழங்கப்படக் கூடாது என்பதில் கவனம் செலுத்தி வருகின்றனர். கல்முனை மாநகரம் பறிபோகக்கூடாது என்றும் கல்முனை தவிர்ந்த ஏனையவர்கள் கல்முனைக்குள் செயற்பட வேண்டும் என்ற மனோநிலையுடன் செயற்படுகின்றனர்.

5. தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை.

கல்முனை மாகரசபையில் இரு பிரதேச செயலகங்களும் ஒரு உப செயலகப்பிரிவும் காணப்படுகின்றது. சுமார் 30000க்கு மேற்பட்ட மக்கள் தமிழ் உப செயலகப்பிரிவில் காணப்படுகின்றனர். இதன் காரணமாக தமிழ் மக்கள் தமது பிரதேச செயலகத்தை தரமுயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைதது வருகின்றனர். சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றம் வழங்கப்பட வேண்டும் எனக்குறிப்பிடும் சிறுபாண்மையினரின் உள்நோக்கம் காணப்படுகின்றது. ஆதரவுகளை வழங்கியே தமது பிரதேச செயலகத்தை தரமுயர்த்த முடியும் என்ற எண்ணப்பாட்டில் உள்ளனர்.

6. புதிய சபையின் உருவாக்கம் கல்முனை மாநகர சபையின் அரசியல் பலத்தினை சிதைவுறச் செய்யும். மாநகர சபையோடு ஒப்பிடுகின்ற போது நிதி மூலங்களைக் கண்டறிவதில் பிரச்சினைகள் இருக்கின்றது.

புதிய உள்ளூராட்சி மன்றத்தினை உருவாக்குவதால் ஏற்படும் சாதக பாதக விளைவுகள்

எனவே மேற்கூறப்பட்ட அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத்தின் அவசியப்பாட்டினையும் வழங்குவதாக உள்ளது. இருப்பினும் உள்ளூராட்சி மன்ற உருவாக்கத்திலும் சில சிக்கல் தன்மையும் காணப்படுகின்றது. சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபை வழங்கப்ட்டால் ஏற்படும் சாதக, பாதக விளைவுகள் தொடர்பாக வழங்கப்பட்ட வினாக்கொத்தின் மூலம் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அவையாவன:

இவ்வுள்ளூராட்சி மன்றம் வழங்கப்படடால் ஏற்படும் சாதக விளைவுகள் பின்வருமாறு அமைந்துள்ளது. சேவைகளை இலகுவான முறையில் பெற்றுக் கொள்ள முடியும். வளப்பங்கீடு உரிய முறையில் இடம்பெறும். தீர்மானங்கள் காலதாமதமின்றி மேற்கொள்ளலாம். அதிகாரிகளின் அலட்சியப் போக்கினை தடுக்கலாம். ஊருக்கென தனியான உள்ளூராட்சி சபை வழங்கப்பட்டால் காலதாமதமின்றி தமது நடவடிக்கைகளை மக்கள் மேற்கொள்ள முடியும். அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து சாய்நதமருது உள்ளூராட்சி சபையில் திட்டமிடல்கள், அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளலாம். கல்முனை மாநகர சபைகளின் சுமை குறையும்.

பாதக விளைவுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். அவையாவன: தீர்மானங்கள் மேற்கொள்வதில் வினைத்திறன் காணப்படும் எனினும் கலந்தாலோசிக்கும் தன்மை குறைவாக காணப்படும். வரிகளை அறவிடுதல் சம்பந்தமாக மக்களுக்கு விழிப்பூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையும் உள்ளது. உள்ளூராட்சி மன்ற சட்டத்திட்டங்கள் பற்றிய அறிவு அவசியமான ஒன்றாக காணப்படுவதால் அவற்றை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். எதிர்கால அரசியல் தலைமைகள் சாய்ந்தமருது அபிவிருத்தி எனும் அடிப்படையில் செயலாற்றுதல் என்பது இயலாத காரியமாகும்.

**பரிந்துரைகள்**

சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி மன்றம் உருவாக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கை சாய்தமருது பிரதேச மக்களிடமும் சமூக அமைப்புக்களிடமும் காணப்படுகின்றன. அவை சாய்ந்தமருது, கல்முனை ஆகிய இவ்விருவூர்களும் அரசியல் காரணமாக ஏமாற்றப்பட்டிருக்கின்றன என்பதை வெளிப்படுத்திக்காட்டுகின்றன. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தலைமையில் கலந்துரையாடி தீர்க்கப்பட வெண்டும். ஆரம்பத்தில் காணப்பட்ட பழைய முறைமையை கொண்டுவர வேண்டும்.

உள்ளூராட்சி சபைக்கான அடிப்படை நிபந்தனைகளைக் கொண்டிருக்கும் சாய்ந்தமருது பிரதேசத்தக்கு உள்ளூராட்சி சபை வழங்கப்பட வேண்டும். அதாவது, உள்ளூராட்சி மன்றத்தை பெறுவதற்கான அனைத்து தகுதிகளையும் கொண்டிருககும் சாய்ந்தமருதுப் பிரதேசத்திற்கு உள்ளூராட்சி சபை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கரையோர மாவட்டம் எனும் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கல்முனை மாநகரத்தை பாதுகாத்து சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றத்தை வழங்க வேண்டும். கல்முனை மாநகர சபைக்குட்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களின் இணக்கத்தைப் பெற வேண்டும். அதாவது, சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி ` சபை நியாயமான தன்மையினை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கல்முனை மக்களினது மனோநிலை தொடர்பாகவும் ஆராயப்பட வேண்டும். கல்முனை மாநகரம் பிரிபடாது என்பதை மக்களுக்கு உணர்த்தி அதற்கான விழிப்பூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**முடிவுரை**

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்துக்கான உள்ளூராட்சி மன்றத்தை பெற்றுக் கொள்ள பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனை அவதானிக்கலாம். அரசியல் கட்சிகளின் வாக்குறுதிகள் இதற்குப் பிரதான காரணமாகும். சாய்ந்தமருது மக்களின் கோரிக்கையின் பிரகாரம் புதிய பிரதேச சபை உருவாக்கப்படும் பட்சத்தில் பல சாதகமான விடயங்கள் ஏற்படுமாயினும் அதனால் பல பாதகமான விளைவுகளும் ஏற்படக்கூடும் என்பதும் ஆய்வினூடாக கண்டறியப்பட்டுள்ளது. எனவே தான் பாதகமான விளைவுகளை தவிர்க்கும் வகையிலும் அம்மக்களின் நீண்ட கால அபிலாஷையினை பூர்த்தி செய்யும் வகையிலும் மாற்று வழிமுறை ஒன்றை பரீட்சிக்க வேண்டியுள்ளது. புதிய பிரதேச சபை தொடர்பாக உறுதியான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது காலத்தின் கட்டயமாக உள்ளது என்பதை இவ்வாய்வின் மூலம் அறியலாம்.

**உசாத்துணைகள்**

Ariff, N. (2015). *Why We Need a Separate Local Government Body to Sainthamaruthu.* Retrieved from https://www.colombotelegraph.com/index.php/why-we-need-a-separate-local-government-body-to-sainthamaruthu/

Mahwood, P. (1983). *Local Government in the third world (*ed). New York: Willey and Son.

Milhana, U.L., and Nufile A.A.M. (2016). *Determinants of Assessment Tax Revenue of Municipalities in Sri Lanka: A Case Study In Kalmunai Municipal Council.* Sri Lanka. Retrieved from http://ir.lib.seu.ac.lk/bitstream/handle/123456789/2188/ECO%20-%20Page%2031-34.pdf?sequence=1&isAllowed=y

அபேரத்ன, உ. (2007). *உள்ளூர் ஆட்சி நிறுவனங்கள்.* கொழும்பு, இலங்கை: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.

இஹ்ஜாஸ், எம்., சிவக்குமார், என்., பௌசர், எம்.ஏ.எம்., & ரமீஸ்.அ. (2015). *சமகால அரசியல் எண்ணக்கருக்கள்.* கண்டி, இலங்கை: தகவல் நலன்புரி அமைப்பு.

*உண்மைகளும் ஆவணங்களும்.* (2018). சாய்ந்தமருது, இலங்கை: மக்கள் பணிமனை சாய்ந்தமருது - மாளிகைக்காடு.

கலாசார சபை பிரதேச செயலகம். (2008). ***மருதமலர்.*** சாய்ந்தமருது, இலங்கை: மருதம் இலக்கிய வட்டம்.

சர்ஜுன், ஏ., & றிபான், ஏ.எம். (2011). *சமகால அரசியல் எண்ணக்கருக்கள்.* இலங்கை: சாந்தியில்ல வெளீயிட்டகம்.

சிவராஜா, அ. (2006). *இலங்கை அரசியல்.* கொழும்பு, இலங்கை: குமரன் புத்தக இல்லம்

பறக்கததுல்லாஹ், ஏ. எம். (2015). *கல்முனை மாநகரம் உள்ளூராட்சியும் சிவில் நிருவாகமும்.* தெஹிவலை, இலங்கை: ஏ. ஜே பிறிண்ட்.

றயீசுத்தீன், எம். (2014). *இலங்கையின் அரசியல் முறைமை.* சிலாவத்துறை, இலங்கை: முசலி இளைஞர் ஒன்றியம்.

*நாம் சொல்வதெல்லாம் உண்மை உண்மையைத் தவிர வேறில்லை.* (n.d). சாய்ந்தமருது, இலங்கை: மக்கள் பணிமனை ஜும்மா பள்ளிவாசல் வளாகம் சாய்ந்தமருது - மாளிகைக்காடு.

நூறுல்ஹக், எம்.எம்.எம். (2017). *யார் துரோகிகள்? சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை.* சாய்ந்தமருது, இலங்கை: மருதம் கலை இலக்கிய வட்டம் (நூலகம்).

fhjh;> wp.V. (2018> ngg;uthp 21). jpz;kf; foptfw;wy; Kuz;fSf;Fs; fy;Kid khefu rig. tpbnts;sp> 10.

w`;kj;Jy;yh`;> hP.Nf. (2018> brk;gh; 26). rha;e;jkU jdpahd efu rigf;fhd th;j;jkhdp mwptpj;jiy kf;fs; tpiutpy; vjph;ghh;f;fpd;wdh;. tpbnts;sp> 02.